செய்தி வெளியீடு எண்: 1005 நாள்:30.12.2020

**செய்தி வெளியீடு**

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 9.4 சதவீதம் மட்டுமே செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்று பத்திரிக்கை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும். உண்மையில் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் செயல்பாட்டு விகிதம் 82.4 சதவிகிதமாகும். கடந்த 10 ஆண்டுகளில் 26,309 புதிய தொழில் திட்டங்கள் தமது புதிய உற்பத்தியை துவங்குவதற்கான "இயங்குவதற்கான இசைவு ஆணையை (CTO)" தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பெற்றுள்ளன. கடந்த 3 நிதியாண்டுகளில் மட்டும் 1,164 புதிய உயர் அழுத்த மின் இணைப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் உற்பத்தி துறையின் மொத்த மதிப்பு கூட்டல் ( GSVA- Gross State Value Added) ஆண்டுக்கு சராசரியாக 12.7 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி பெற்று வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக தேசிய சராசரியைக் காட்டிலும் அதிக வளர்ச்சியை தொடர்ந்து பெற்று, இந்தியாவில் தொழில்துறையின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

நாளிதழ் ஒன்றில் வரப்பெற்ற இச்செய்தியானது மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை (Department of Promotion of Industry and Internal Trade) இணைய தளத்திலுள்ள தொழில் முனைவோர் கருத்துருக்களின் (Industrial Enterpreneur Memorandum) அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தொழில் முனைவோர் கருத்துரு இணையதளத்தில்

முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீட்டு நோக்கத்தினை முதலில் பதிவேற்றி விட்டு, பிறகு திட்டம் செயல்பாட்டுக்கு வந்த பின்னர் திட்டத்தின் நிலையை பதிவு செய்யலாம். இந்த இணையதளத்தில் அனைத்து முதலீட்டாளர்களும் பதிவு செய்வதை உறுதி செய்ய எவ்வித அமைப்போ, கட்டாயமோ இல்லை. ஆதலால், ஒரு சில முதலீட்டாளர்கள் மட்டுமே இந்த IEM இணையதளத்தில் பதிவு செய்கிறார்கள். உண்மையில், முதலீடே செய்யாதவர்கள் கூட, இதில் பதிவு செய்திடக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இதில் பதிவு செய்யப்பட்ட முதலீடுகளை பற்றிய செய்திகள் சரியானவைதானா என்று உறுதிசெய்ய, எந்த விதமான முறைகளும் இல்லை. ஆகவே, இந்த தரவுகளை மட்டும் வைத்து மேலோட்டமாக வெளியிடப்படும் எந்த ஒரு ஆய்வும், ஒரு மாநிலத்தின்உண்மையான முதலீட்டுச் சூழலை பிரதிபலிக்காது.

புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதில், அகில இந்திய அளவில், தமிழ் நாடு மிகச் சிறந்த மாநிலமாக விளங்குகிறது. 2015ம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது போடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 72 சதவீத திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. மேலும் 2019ம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது போடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 89 சதவீத திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. மொத்த புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களில் வணிக உற்பத்தியைத் தொடங்கிய திட்டங்கள் மற்றும் நிலம் வாங்கப்பட்டது, அனுமதிகளுக்காக விண்ணப்பித்தது, சோதனை உற்பத்தி துவக்கம் ஆகிய நிலைகளில் உள்ள திட்டங்களை மட்டும் கணக்கில் எடுத்து இந்த சதவிகிதம் கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட திட்டங்கள் | | | |
|---|---|---|---|
| **வருடம்** | **எண்ணிக்கை** | **பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளவை** | **செயல்பாட்டு விகிதம்** |
| 2011 – 15 | 33 | 30 | 90.9% |
| உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015 | 98 | 71 | 72.4% |
| உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 | 304 | 272 | 89.5% |
| 2016 – 2019 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இதர புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 65 | 39 | 60.0% |
| **மொத்தம்** | 500 | 412 | 82.4% |

2011ம் ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரை, ரூபாய் 5,97,753 கோடி அளவிற்கு முதலீடுகளுக்கான உத்திரவாதம் அளித்த 500 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. மேற்படி திட்டங்களில், 412 தொழில் திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்டு வணிக உற்பத்தியை தொடங்கியுள்ளன அல்லது பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. இவ்வாறு, 82.4 சதவிகிதம் என்ற சிறப்பான அளவிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் செயல்பாட்டு விகிதம் அமைந்துள்ளது.

ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைச் சுட்டிக்காட்ட, அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமின்றி, மேலும் பல்வேறு குறியீடுகளும் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், தமிழ் நாட்டின் மொத்த மதிப்புக் கூட்டல் (Gross State Value Added – GSVA), சராசரியாக ஆண்டுக்கு 12.7 சதவிகிதம் என்ற அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. 2011–12ம் ஆண்டு முதலே, தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளுக்கு வழங்கிடும்

“இயக்குவதற்கான இசைவு (Consent to Operate – CTO)’’ சீரான நிலையில் வளர்ச்சி பெற்று வருகின்றது. **2011–12** ஆண்டு முதல் இன்று வரை, **26,309** திட்டங்களுக்கு “இயக்குவதற்கான இசைவு” வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக முடிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வரும் தொழில் திட்டங்களுக்குதான் “இயக்குவதற்கான இசைவு” (CTO) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

| **வருடம்** | **இயக்குவதற்கான இசைவு பெற்ற தொழிற்சாலைகள்** |
|---|---|
| 2011-2015 | 6418 |
| 2015-2016 | 2086 |
| 2016-2017 | 3604 |
| 2017-2018 | 3704 |
| 2018-2019 | 3438 |
| 2019-2020<br>(மூன்றாவது காலாண்டு முடிய) | 1237 |
| மொத்தம் | 26309 |

இது போலவே, கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் **1164** புதிய உயர் மின் அழுத்த இணைப்புகள் (High Power Tension Connection) தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரவுகள் அனைத்தும் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் ஒரு முன்னணி மாநிலமாக திகழ்வதை உறுதி செய்கின்றன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**